

கடல்வழி வணிகத்தை ஊக்குவிக்க வேண்டியது தலையாய கடமை என்று சென்னையில் நடைபெறுகின்ற நீலப் பொருளாதார மாநாடு 2025–ஐ தொடங்கி வைத்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார். இந்த நீலப் பொருளாதார மாநாட்டில், சென்னை மற்றும் காமராஜர் துறைமுக ஆணையத்தின் தலைவர் சுனில் பாலிவால், IAS., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ் IAS., தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர் / துணைத்தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், IAS., இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு மாநில துணைத்தலைவர் C.தேவராஜன் மற்றும் துறைமுக மேம்பாட்டாளர்கள், துறைமுக நிர்வாகிகள், துறைமுக பயனீட்டாளர்கள், கடல்சார் சுற்றுலா சார்ந்த செயல்பாட்டாளர்கள், மீன்வள மற்றும் மீன்வளர்ப்புத் துறை சார்ந்த வல்லுனர்கள், கப்பல் கட்டுதல், பழுதுபார்த்தல் துறை வல்லுநர்கள், இந்த மாநாட்டு கருத்தரங்கிற்கு வந்திருக்கும், பல்வேறு துறைசார்ந்த வல்லுநர்கள், கடல்சார் வாரிய அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் வைகை அணையில் இருந்து வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஒருபோக பாசன நிலங்களுக்கு தண்ணீர் திறந்து வைத்தார். உடன் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., மதுரை மாநகர தெற்கு மாவட்டச் செயலாளர் மணிமாறன், ஒன்றிய செயலாளர்கள் அஜித் பாண்டி, ஜெயச்சந்திரன், சுதாகர், எஸ்.வி.எஸ்.முருகன், எம்.பி.பழனி, உசிலம்பட்டி நகர செயலாளர் எஸ்.ஓ.தங்கப்பாண்டி, பேரூர் செயலாளர்கள் ஜெயராமன் பிரகாஷ், முன்னாள் நகர செயலாளர் குபேந்திரன், மாவட்ட இலக்கிய பகுத்தறிவு அணி அமைப்பாளர் கலைவாணன் மற்றும் அதிகாரிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## தலைவர் கலைஞர் பெற்ற அதே பெரியார் விருதைப் பெற்றிருக்கிறேன்!

# என் ஒரே கனவை நிறைவேற்றிய கழகத் தலைவர் - முதல்வர் தளபதிக்கு நன்றி!

### கழக முப்பெரும் விழாவில் – துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**கரூர், செப். 19–**

**என் ஒரே கனவை நிறைவேற்றிய கழகத் தலைவர் முதலமைச்சசருக்கு நன்றி... நன்றி... நன்றி! என்று திமுக முப்பெரும் விழாவில் பெரியார் விருது' பெற்ற துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உருக்கத்துடன் உரையாற்றினார்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழா 2025, செப்டம்பர் 17 ஆம் தேதியன்று கரூர் புறவழிச் சாலைகோடங்கிபட்டியில் நடைபெற்றது.

இவ்விழாவில் விருது பெற்றவர்கள் சார்பாக பெரியார் விருது பெற்ற துணைப் பொதுச் செயலாளரும் நாடாளு மன்ற குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி உரையாற்றினார்.

அப்போது அவர், குறிப்பிட்டதாவது :–

“ஆங்கிலத்திலே ஆல் ரோட்ஸ் லீட் டு ரோம் என்று சொல்லுவார்கள். இன்று இந்தியாவின் பார்வையையே கரூருக்கு திருப்பி இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களே... துணை முதல்வர் உதயநிதி அவர்களே... கழகத்தின் பொருளாளர் அவர்களே, முதன்மை செயலாளர் அவர்களே, துணை பொதுச்செயலாளர்களே... அமைப்புச் செயலாளர்களே...



இவ்வளவு பிரம்மாண்டமான இந்த முப்பெரும் விழா கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கக் கூடிய கரூர் மாவட்ட கழக செயலாளர் செந்தில் பாலாஜி அவர்களே, அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களே... சட்டமன்ற உறுப்பினர்களே, மாவட்ட கழகத்தின் செயலாளர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அத்தனை நிலைகளில் இருந்தும் தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு பகுதிகளில் இருந்து இந்த நிகழ்ச்சிகளை கலந்து கொண்டிருக்கக் கூடிய சகோதர சகோதரிகளே...

தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகளே... இன்று மேடையிலே விருதுகளை பெற்றிருக்கக்கூடிய கழகத்திற்காக தன் வாழ்நாளெல்லாம் உழைத்திருக்கக்கூடிய அத்தனை பெரியவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒரு கனவு இருக்கும். எனக்கு இருக்கக்கூடிய ஒரே கனவு... அது தலைவர் கலைஞர் அவர்கள் பெற்ற அதே விருதை பெரியார் விருதை இன்று பெற்றிருக்கிறேன். அதை நிறைவேற்றித் தந்திருக்கக்கூடிய என்னுடைய முதலமைச்சர், கழகத்தின் தலைவர், அண்ணன் தளபதி அவர்களுக்கு என்னுடைய நன்றி, நன்றி, நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கொட்டக்கூடிய மழையிலும் இங்கே நின்று கொண்டிருக்கக்கூடிய உடன்பிறப்புகளை பார்க்கும் பொழுது இந்தப் படை போதுமா...

எந்தத் தேர்தலையும் எந்த பகைவர்களாக இருந்தாலும், அது நம்முடைய பரம்பரை பகைவர்களாக இருக்கட்டும்... பாரம்பரிய பகைவர்களாக இருக்கட்டும்... புதிதாக வரக்கூடியவர்களாக இருக்கட்டும்... அத்தனையையும் வென்று காட்டுவோம்... வென்று காட்டுவோம் என்று சூளுரைக்கக் கூடிய இந்த படை போதும்! வெற்றி நிச்சயம்” என்று உரையாற்றினார்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

## ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தில் திருநெல்வேலி–

# பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதிகளில் 50 ஆயிரம் குடும்பங்கள் இணைப்பு!

### மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் தகவல்!

நெல்லை,செப்.19–

‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தில் திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த 50,000 குடும்பங்கள் இணைந்துள்ளனர். மண், மொழி, மானம் காக்க நெல்லை மற்றும் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதிகளில் இருக்கும் 581 வாக்குச் சாவடிகளிலும் உறுதிமொழி எடுக்க இருப்பதாக நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளை சட்ட மன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டை தலைக்குனிய விடமாட்டோம் என்ற தலைப்பில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

ஜூலை 1ஆம் தேதி, முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தை தொடங்கி வைத்தார். இன்று நாம் எதிர்கொள்ளும் பண்பாடு, பொருளாதார மற்றும் அரசியல் அநீதிகளுக்கு எதிராக தமிழ்நாட்டின் ஒவ்வொருவரையும் ஒன்றிணைக்கும் இயக்கமாகும். தமிழர் பண்பாட்டை



பறைசாற்றும் கீழடி புறக்கணிப்பு, இந்தித் திணிப்பு தமிழ்நாட்டுக்கான நிதி மறுப்பு, NEET போன்ற நியாயமற்ற தேர்வுகள், கூட்டாட்சித்தது வத்தும் சிதைப்பு மற்றும் நமது அரசியல் பிரதிநிதித் துவத்தைக் குறைக்கும் வகையிலான தொகுதி மறுவரையறை சதி என தமிழ்நாட்டின் மண், மொழி மற்றும் மானத்தின் மீது தொடர் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

இவற்றையெல்லாம் எதிர்த்து தமிழ்நாட்டு மக்களை ஒன்றிணைக்கும் வகையில் தொடங்கப்பட்டதுதான் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கம் தொடங்கப்பட்ட 70 நாட்களில் கழகத்தினர் 7 லட்சத்திற்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 68,000 வாக்குச்சாவடிகளிலும் உள்ள ஒவ்வொரு வீட்டையும் சென்று சந்தித்துள்ளோம்.

தமிழ்நாடு முழுதுவதும் ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தில் இணைந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை சுமார் 1 கோடியைத் தாண்டியுள்ளது என்பதை சமீபத்தில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தார். நாம் நம் மாவட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் 50,000 குடும்பங்களை சேர்த்து சாதித்து உள்ளோம். இணைக்கப்பட்ட குடும்பங்கள் தமிழ்நாட்டின் மண், மொழி மானம் காக்க அணி திரண்டு ள்ளனர்.

இப்போது ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் இரண்டாம் கட்டம் தொடங்குகிறது. ‘ஓரணியில் தமிழ்நாடு’ குடும்பங்கள் அனைத்தும் வாக்குச்சாவடி மற்றும் மாவட்ட அளவில் ஒன்றுகூடி, ஓரணியில் நின்று போராடி தமிழ்நாட்டைப் பாதுகாக்கும் தீர்மானங்களை முன்மொழிந்து ஏற்றுக் கொள்வோம்.

முதல் கட்டமாக நாளை,அதாவது செப்டம்பர் 15 அன்று,பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு 68,000 வாக்குச்சாவடிகளிலும் தமிழ்நாட்டைக் காக்கும் உறுதிமொழியை முன்மொழியும் கூட்டம் நடைபெறுகிறது.

அன்றைய தினம் ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்ட குடும்ப உறுப்பினர்கள் அந்தந்த வாக்குச்சாவடிகளில் ஒன்றுகூடி முன்மொழியும் தீர்மானங்களுக்கு முழு ஆதரவையும் வழங்குவார்கள். உறுதி மொழி ஏற்பார்கள்.

மூன்றாம் கட்டமாக செப்டம்பர் 20 அன்று ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தில் இணைந்த ஒரு கோடிக்கும் மேலான குடும்பங்களும் “தமிழ்நாட்டை தலைகுனியவிட மாட்டேன்” என ஒரே குரலில் உலகிற்கு பிரகடனம் செய்யும் விதமாக இந்த கூட்டங்கள் அமையும்.

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் 311 வாக்குச்சாவடிகளிலும் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் 270 வாக்குச்சாவடிகளிலும் மண், மொழி, மானம் காக்க உறுதி மொழியும் எடுக்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

